உ

சிவமயம்



# ஸ்ரீ வைகுந்த மோட்ச மாலை

தொ[illegible]சிரியர்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம் விக்கினேஸ்வராய நமஹ

திருச்சிற்றம்பலம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத்தமிழ் மூன்றும் தா

# ஸ்ரீ வைகுந்த மோட்சமலை

தொகுப்பாசிரியர்

**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**

ஈஸ்வரி
வெளியீடு : 08
சேனைக்குடியிருப்பு.

இரண்டாம் பதிப்பு
10.08.2012

விலை:100/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேராதார்

மானிடப் பிறவி எடுத்த நாள் முதல் இப்புண்ணிய பூமியில் தான் வாழுங்கால் இறைவன் பாதம் பணிந்து போற்றி வணங்காதார் தான் மடிந்த பின்னும் தன் ஆத்மா நற்கதி சேராதென்பர்.

நாம் இப்பிறவி எடுத்ததே முத்தி இன்பம் பெறுவதற்கு என்ற கூற்றுத் தெளிவு படுத்துகின்றது.

மனிதன் பிறந்து வளமோடும் சுகமோடும் வாழ்ந்து இறப்போடு அவன் வாழ்வு நிறைவடைகின்றது. இந்த நிறைவு நன்நாளை எண்ணி வாழாத மனிதன் தன் வாழ்க்கையில் பல கொடிய தீய எண்ணங்களிலும் செயல்களிலும் வீழ்ந்து மடிந்து கொண்டிருக்கின்றான். எனவே அன்பர்களே முற்பிறப்பு முதல் இப்பிறப்பு வரை அவர்கள் செய்த பாவங்கள் தீர இறந்த ஒருவரின் கிரியையிலாவது உற்றார் உறவினர் கலந்து தேவாரம், சிவபுராணம், போற்றி அர்ச்சனை பாடியும் செவிமடுத்தும்ஒருவர் பாட மற்றோர் பின் சீர்பாடி மயானம் சென்று வாய்க்கரிசியிட்டு கைமண் போட்டு அடக்கம் செய்த பின் அமைதியோடும் பக்தியோடும் பட்டனத்துப்பிள்ளையார், அருணகிரியார், திருப்புகழோடும் இந்த மோட்சப் பாடல்களை பாடி அன்னவரின் ஆத்ம நற்பரகதி அடைய இறைவனை வேண்டிப்பணிந்து வணங்குவோமாக.

பெரியோர்களே!

பஞ்சபுராணம், சிவபுராணம், போற்றி அர்ச்சனை, பட்டணத்துப்பிள்ளையார் பாடல், (உடற்கூற்று வண்ணம்) அருணகிரியார் திருப்புகழ், அபரக்கிரியைகள், ஆகியவற்றோடு அடியேனால் ஆக்கப் பெற்ற மோட்சப் பாடலையும் ஒன்றாக்கி ஸ்ரீ வைகுந்த மோட்சமாலை எனத்தொகுத்து இருக்கின்றேன், இச்சிறு நூலாக்கத்திற்கு பெரியோர்களின் ஆசியும், தங்களைப் போன்றோரின் ஊக்க ஒத்துழைப்பும் எனக்கூறிக்கொண்டு இந்நூலின் சிறுகுறைபோக்கி குணங்கொள்ளுமாறும் பரம்பொருளாகிய வைகுந்த வாசனின் மலரடித்தாழ் எல்லோரும் சரணடைவோமாக.

இவ்வண்ணம்,
தங்களின் அன்பன்
**ஈஸ்வரி மூர்த்தி**

சேனைக்குடியிருப்பு
17.06.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## பஞ்சபுராணம்

### தேவாரம்

எண்ணுகேள் என்சொல்லி எண்ணுகேனே
எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்
கண்ணிலேன் மற்றோர்களைக் கண்இல்லேன்
உன் கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது ணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றோன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

### திருவாசகம்

முக்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வோனைப்
பக்தி நெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

### திருவிசைப்பா

கற்றவர் விழுங்குற் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றெம் சிவனை
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளங்
குளிர என் கண் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவிடங்கன்
விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
திருப்பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெல்லாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலாவுலாவிய நிர்மலி வேணியன்
அலகில் சொதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதான சற்குணர் நேயா
ஒப்பிலா மாமணிக் கிருவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமானே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# மாணிக்க வாசக சுவாமிகள் பாடியருளிய
# திருவாசகம்

எட்டாம் திருமுறைப்பாடல் திருவாசகச் சிறப்பு

சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையெனும் பிறவி சூழும் தலைநீக்கி
அல்லல் அறுத்தானந்த மாக்கிதே எல்லை
மருவாநெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் மென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க்
ஆகம மாகிநின்ற றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்சகன்தன் பொய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார ஓங்குவிக்கும் சீரோன் கழல்கள் வெல்க.

ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
நோசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடிபோற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவனெவன் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பவன்யான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுனது வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாக வேதங்கள்
ஐயாஎன ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய்த் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின் மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நனியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையோன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைஇந்தும் வஞ்சனையைச் செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மெல்வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறிந்ததயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே.

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்மிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஓற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாரமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே.

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏந்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ சிவபெருமான் 108 போற்றி

அர்ச்சனை

**ஓம்** அப்பா போற்றி.........
**ஓம்** தாயே போற்றி.........
**ஓம்** அரசே போற்றி.........
**ஓம்** அழகே போற்றி.........
**ஓம்** அற்புதா போற்றி.........
**ஓம்** அம்பலா போற்றி.........
**ஓம்** அருந்தவா போற்றி.........
**ஓம்** அண்டா போற்றி.........
**ஓம்** ஆவங்கா போற்றி.........
**ஓம்** ஆரணா போற்றி.........
**ஓம்** ஆலவா போற்றி.........
**ஓம்** இறைவா போற்றி.........
**ஓம்** இன்பா போற்றி.........
**ஓம்** உடையாய் போற்றி.........
**ஓம்** உயிரே போற்றி.........
**ஓம்** எண்ணே போற்றி.........
**ஓம்** எண்குணா போற்றி.........
**ஓம்** எளியா போற்றி.........
**ஓம்** ஏழிசையே போற்றி.........
**ஓம்** ஒருவா போற்றி.........

ஓம் ஐயா போற்றி.........
ஓம் அரனே போற்றி.........
ஓம் அமுதே போற்றி.........
ஓம் அத்தா போற்றி.........
ஓம் அறிவா போற்றி.........
ஓம் அரியோய் போற்றி.........
ஓம் அணுவே போற்றி.........
ஓம் ஆதியே போற்றி.........
ஓம் ஆரமுதே போற்றி.........
ஓம் ஆண்டவா போற்றி.........
ஓம் ஆரூரா போற்றி.........
ஓம் இடபா போற்றி.........
ஓம் ஈசா போற்றி.........
ஓம் உணர்வே போற்றி.........
ஓம் ஊழியே போற்றி.........
ஓம் எழுத்தே போற்றி.........
ஓம் எழிலா போற்றி.........
ஓம் ஏகா போற்றி.........
ஓம் ஏறூர்ந்த போற்றி.........
ஓம் ஒப்பிலா போற்றி.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் ஒளியே போற்றி.......... | ஓம் ஒலியே போற்றி.......... |
| ஓம் ஓங்கார போற்றி.......... | ஓம் கடம்பா போற்றி.......... |
| ஓம் கதிரே போற்றி.......... | ஓம் கதியை போற்றி.......... |
| ஓம் கனியே போற்றி.......... | ஓம் கலையே போற்றி.......... |
| ஓம் காருண்யா போற்றி.......... | ஓம் குறியே போற்றி.......... |
| ஓம் குருவே போற்றி.......... | ஓம் குணமே போற்றி.......... |
| ஓம் கூத்தா போற்றி.......... | ஓம் சடையா போற்றி.......... |
| ஓம் சங்கார போற்றி.......... | ஓம் சதுரா போற்றி.......... |
| ஓம் சதாசிவா போற்றி.......... | ஓம் சிவமே போற்றி.......... |
| ஓம் சிறமே போற்றி.......... | ஓம் சித்தா போற்றி.......... |
| ஓம் சீரா போற்றி.......... | ஓம் சுடரே போற்றி.......... |
| ஓம் சுந்தரா போற்றி.......... | ஓம் செல்வா போற்றி.......... |
| ஓம் செங்கணா போற்றி.......... | ஓம் செம்பொனா போற்றி.......... |
| ஓம் சொல்லே போற்றி.......... | ஓம் ஞாயிறே போற்றி.......... |
| ஓம் ஞானமே போற்றி.......... | ஓம் தமிழே போற்றி.......... |
| ஓம் தத்துவா போற்றி.......... | ஓம் தலைவா போற்றி.......... |
| ஓம் தந்தையே போற்றி.......... | ஓம் தாண்டவா போற்றி.......... |
| ஓம் திங்களே போற்றி.......... | ஓம் திசையே போற்றி.......... |
| ஓம் திரிசூலா போற்றி.......... | ஓம் துணையே போற்றி.......... |
| ஓம் தெளிவே போற்றி.......... | ஓம் தேவதேவே போற்றி.......... |
| ஓம் தோழா போற்றி.......... | ஓம் நவச்சிவாய போற்றி.......... |
| ஓம் நண்பா போற்றி.......... | ஓம் நஞ்சுண்டா போற்றி.......... |
| ஓம் நான்மறையா போற்றி.......... | ஓம் நிறைவே போற்றி.......... |
| ஓம் நினைவே போற்றி.......... | ஓம் நீலகண்டா போற்றி.......... |
| ஓம் நெறியே போற்றி.......... | ஓம் பண்ணே போற்றி.......... |
| ஓம் பித்தா போற்றி.......... | ஓம் புனிதா போற்றி.......... |
| ஓம் புராணா போற்றி.......... | ஓம் பெரியோய் போற்றி.......... |
| ஓம் பொருளா போற்றி.......... | ஓம் பொங்கரவா போற்றி.......... |
| ஓம் மணியே போற்றி.......... | ஓம் மதிசூடியே போற்றி.......... |
| ஓம் மருந்தே போற்றி.......... | ஓம் மலையே போற்றி.......... |
| ஓம் மஞ்சா போற்றி.......... | ஓம் மணாளா போற்றி.......... |
| ஓம் மெய்யே போற்றி.......... | ஓம் முகிலே போற்றி.......... |
| ஓம் முத்தா போற்றி.......... | ஓம் முதல்வா போற்றி.......... |
| ஓம் வாழ்வே போற்றி.......... | ஓம் வைப்பே போற்றி.......... |

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பட்டணத்துப்பிள்ளையார் அருளிய
# உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாது மொருவனு மாகி
இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
யுணர்வு கலங்கி யொழுகிய விந்து
வூறு சுரோணித மீது கலந்து

பனியிலொர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமட மிதென்று
பார்வை மெய்வாய்செவி கால்கை ளென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளு மறிந்து

மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்டப வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளி நகை யூற லிதழ்மட வாரு
முவந்து முகந்தி வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப

உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் தரு ஞான குருவுப தேச
முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கும் பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க

மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு

மனது பொறாம லவர்கிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு தண்டு
தெடிய மாமுதல் சேர வழங்கி

ஒருமத லாகி முதுபொரு ளாய்
இருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வழமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையி னில்ஓர் தடியு மாகியே

வருவது போவ தொருமுது கூனும்
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயில்வரு நேரமிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலகர்கள் கோரணி கொண்டு

கவியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
காலவழி மெல்வழி சார நடந்து

தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்ச முலைந்து மருண்டு
திடமு மலைந்து மிகவு மலைந்து
தேறி நலாதர வேதென நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டது மென்று தெளிந்து
இனியென கண்ட மினியென சொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்ட மொழிந்து
கடைவிழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே

வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேவயிர் கால மறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த
ரிடுமென வந்து படையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று

பலரையுமேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகி றொங்கல் களப மணிந்து
பாவமே செய்து நாறு முடம்பை

வரிசை கெடாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
நம்புமடி யேனை யினிநாளுமே.

கட்டி யணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழக்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடி வைப்பாரே விறைவா கச்சி யேகம்பனே

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
வப்ப னெத்தனை யெத்தனை யப்பனே
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை சென்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய்வேன் கச்சி யேகம்ப நாதனே!

முடிசார்ந்த மன்னரு மற்றமுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம் ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால்பொன்னின் அ.ம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவா ரில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ் - பொது

(மனிதப் பிறப்பு முதல் இறுதிவரை)

அருகு நுனி பனியனைய சிறிய துளிழ பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருதமலை குதலை மொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையர் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளுவென உடல் வளர
ஆளுமேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்

அழகுபெற நடையுடைய கிருதுபடு மொழி பழகி
ஆவியாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிரதிவிட மனமிறுகி
ஆசை யாளரராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர் போலே

வெறுமிடிய னொரு தவசி யமுது படை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன் முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணியார் சொலே மேலே தாகிட
விதிதனை நினையாதே

மினுகுமினு கெனுமுடம மறமுறுகி நெகிவுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும் விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனா
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருநாளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையகளு முடுகிவர உறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகை நோய்
பெருவயிறு வயிறுவலி படுவன் வர இருவிழிகள்
பீளைசாடிட ஈளை மேலிட
வழவழென உமிழுமது கொழ கொழெ ஒழுகிவிழ
வாடியூ னெலாம் நாடிபேதமாய்
மனையவள் மனம் வேறாய்

மறுகமனை யுறு மவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயென வாளர் சீயென
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவென வீடு போவென
வலதழிய விரகழிய உரை குழறி விழிசொருகி
வாயு மேலிட ஆவி போகு நாள்
மனிதர்கள் பல பேச

இறு தியதொ டறுதியென உறவின் முறை கதறியழ
ஊழை மாதராள் மோதி மேல் விழி
எனதுடமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமோ லேலென வாயை ஆவென
இடுகுபறை சிறுபறைகள திமிலை யொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனி விடும் வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினையு மலமுற இறவியொடுமு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்எகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமாளே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஊனாரும் முட்பிணியு மானாக வித்தவுட
லூதாரி பட்டொழிய வுயிர்போனால்
ஊரார் குவித்துவர ஆவாவெனக்குறுகி
ஓயா முழக்கமெழ அழுதோய
நானா விதச்சிவிகை மேலே கிடத்தியது
நாறா தெடுத்தடவி யெரியூடே
நாணாமல் வைத்துவிட நீறாமெ னிப்பிறவி
நாடா தெனக்குனருள் புரிவாயே
மானாக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்
ஆனா வரக்கருடன் வானார் பிழைக்கவரு
மாலாய முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பக்தியுடன் ஞானாக மத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே

## தாயாருக்குத் தகனக் கிரியை செய்கையிற் பாடிய வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே னினி

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழன்மூட்டு வேன்

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் கரதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொந்து சுமந்து பெற்றுத் நோவாம லேத்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவே னாத்த/டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே யமிர்தமே செல்லத் திரவியபூ
மானே யெனவழைத்த வாய்க்கு

அள்ளி யிடுவ தரிசியே தாய்தலைமேற்
கொள்ளி தனை வைப்பேனோ கூசாமன் - மெள்ள
முகமேன் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு

**கலிவிருத்தம்**

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையிலே
அன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே

**வெண்பா**

வெகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியே னையகோ - மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ - சந்தமும்
உன்னை நோக்கி யுகந்து வரங்கிடந்தென்
தன்னையே யீன் றெடுத்த தாய்

வீற்றிருந்தா ளன்னை வீதி தனிலிருந்தான்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லீரும் வாங் ளேதென் றிரங்காமல்
எல்லாஞ் சிவமயமே யாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்சமாலை



## விநாயகர்

திருச்சிற்றம்பலம்

அரியானைக் கணபதியே அரசனார் சேயே
ஐங்கரனே பங்கையம் சேர் உமையாள் கண்ணே
கரிமுகனே கற்பகமேகசடறுத்து
கவியதற்கு முன்னிற்க வேண்டுமையா
பரிவொடு மோட்சவழிப் பாதைகான்
பாழுடம்பு விட்டகன்று பறந்ததையா
தெரியாத சீவனுக்காய் துணையாய் நின்று
திருமாலின் பதம்சேர அருள்செய்வாயே.

அருள் செய்வாய் குஞ்சரனே அமரரோடு
அடியாரின் ஆத்மாவை அடையச் செய்து
பெருவழியில் இடைநின்று மோட்சப் பாதை
பிழைபொறுத்து சீவனுக்கு காட்டுமையா
கருணை கொடு கற்பகமே கழிறேமாலின்
கண்ணரிட வைகுந்த வளியில் நின்று
இருளகற்றி இந்திரபதி புகுதற்பாதை
இன்பமுடன் அழித்தருளப் போற்றினோமே

போற்றி ஜெககணநாதா போற்றி போற்றி
பொன்மலர்தாழ் இணையடிகள் போற்றி போற்றி
ஆர்ப்பரித்து இச்சீவன் அலையவண்ணம்
ஆனைமுக வாரரனே அமரர் வாழும்
ஏற்றமுறு வைகுந்தம் போகும் சுபாதை
இன்பமுடன் காட்டுமைய அன்புவைத்து
சீற்றமுடன் உமைத் தொழுதோம் சித்தி முத்தித்
திருக்கயிலாய வீடடைய அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி



அம்பிகை உமையேருத்திரி அச்சுதன் தங்கையாளே
எம்பிரான் தேவநீலி ஈஸ்பரி கெவுரிமாரி
கொம்புடை மகிடாசூரன் கூர்பலி இட்டகாளி
சந்திரப்பதிமா வைகுந்தம் தாயேநீ காட்டுவாயே

சாம்பவிதுர்க்கை வாலைச்சாத்தகி சுடலைநாச்சி
பாம்பணி பராபரத்தி பகைவரை அழித்த சூலி
நாராயணிவாரகி தேவிநலமருள் உருத்திராணி
புவனை அபிராமிமோட்ச புகுவழி காட்டுவாயே

ஓம்சக்தி உலகமாதா உன்னடி தஞ்சம்மா
வாமவதேவநீல வண்ணரின் பதியைநாடி
ஊன்னுடல் விடுத்துச் சீவன் உடன்னெதிர் வந்தம்மா
கானெடு காளித்தாயே காட்டுவாய் வைகுந்தம் நீயே



## சிவன்

அத்தனே அரனே ஆதிஅமலனே உமையாள்பங்கா
பித்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்தவெண்ணீறு பூசிச்சுடலையில் ஆடும் சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய

கர்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டுவந்தார்
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நரகில்புக்கா(து)
நற்பதி மோட்சவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் சூடும்சிவசிவா இவரின் ஆத்மா
தங்குகள் தடைகள்யின்றி தட்சணம் அணைத்துக் கொண்டு
அங்கு உன்பாதம் போற்ற ஆண்டருள் நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்



தேவர்கள் இடுகண்தீர்த்த செந்தியம் பதியின்வாழ்வே
தாமதம் இன்றிச்சீவன் தனிவளி வந்ததையோ
வேலவா மோட்சவீடு வித்தமமாம் பதியைக் காட்டி
காலனார் கொடுமை செய்யாக் கந்தஷனே காத்திடாயே

சரணமே சரணம் செவ்வேள் சரணபவனே சிவன்
பிரணவ ஒலியினோடு பிரமனின் படைப்பைவிட்டு
அரகரமுருகா வந்துன் அடைகலம் சேர்ந்ததையோ
வரமருள் வடிவேலோனே வைகுந்தம் அருள் செய்வாயே

அழகனேகுமரா ஆண்டிஅறுபடை உறையும் ஞானப்
பழம்பெரும் கனியே மோட்சப் பதிதனை அடைந்தசீவன்
உன்கழலடி பணிந்துகொண்டு கடைத்றேர் முத்திநல்காய்
இளநகை அயில்வேல்கொண்ட ஏந்தலே போற்றி போற்றி

## நாரயணன்



அரிகரிராம ராமாஅச்சுதா அசோதை புத்திரா
சிறிநமோ கிஸ்னதேவா திருவடி அழந்தபாதா
கருமுகில் மேகவண்ணா கருடவாகனனே கண்ணா
முரகரிமுகுந்தா மோட்ச முத்திவீடளித்திடாயோ

மாதவா வெங்கடேசா மாயனே வைகுந்தவாசா
ஆதவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமதுதாழில்
நீதனே நீலவண்ணா நெடியவா மோட்சவீடு
மதிசூதனேள நந்தகோபாலா துணைபுரிந் தளித்திடாயோ

பூதகிமுலைப் பாலுண்ட புருசோத்தம தேவதேவா
ஜனாகிமணாளா றங்காயாதவ குலதிநீதா
பூமகள்கண வாமுத்தி மோட்சநற் பரகதிநல்கி
தேவர்கள் தங்களோடு திருக்கயிலாயம் சேர்ப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமாதேவி



பூமிமாதேவியம்மா உன்பொன்னடி சரணம்தாயே
தாமதமின்றி இந்த சடலத்தை ஏற்றிடம்மா
மேலும் இவ்வாத்மா தன்னை விரைந்துநீ அழைத்திடாது
நாமிநின் சரசகோபால் சன்நிதி சேர்த்திடாயே

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
உடலது உந்தன் பாரம் உயிருமே மோட்சவீடு
இடைவளி தடுமாறாது இன்முகம் கருணைகூர்ந்து
அம்மையே சடலந்தன்னை அன்புடன் ஏற்றிடாயே

அடைக்கலம் உனக்கேஅம்மா ஆணவமாய் கைக்கூடு
படைத்தனன் பிரமதேவன் பழுதின்றி மனிதனாக
விடைகிடைத்தது சீவனுக்கு விண்ணில்நல் மோட்சவீடு
படையொடு பாடைசேர்த்தோம் பாழுடம் பேற்றிடாயே

சுபம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுபமங்களம்

வைகுந்த மோட்சமாலை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அபரக் கிரியைகள்

கிரியை என்பது செயல் எனப்படும். மந்திர உச்சாடனங்களோடு கூடிய இக்கிரியைகள் அதிக சக்தி வாய்ந்தவை ஆகும். இதனால் சைவசமய மக்கள் இக்கிரியை முறையில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவற்றின் அடிப்படையில் ஆலயக்கிரியை, வீட்டுக்கிரியை இரண்டும் சிறப்பிடம் பெறுகின்றன. வீட்டுக்கிரியைகளில் பல கிரியை இடம்பெற்றாலும் ஒருவரின் இறுதிக்காலத்தில் இடம்பெறுவது அபரக்கிரியையாகும் இதனை மரணக்கிரியை எனவும் கூறுவர், மரணச்சடங்கு எனவும் கூறுவர். அபரக்கிரியை இரண்டு விதமாகும்.

1. இறந்த உடலுக்கு கிரியை செய்து எரிப்பது.
2. கடமை செய்து அடக்கம் செய்வது.

சைவ இல்லத்தில் இடம்பெறும் இக்கிரியை பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. ஒருவர் இறந்ததும் வீட்டுக்காரர் அவ்வுடலை தலைமேற்குப் பக்கமாகவும், கால்கள் வடகீழ்ப்பக்கமாகவும் இருக்கவும் கிடத்துவர். அதன் பின் தலைமாட்டில் ஊதுபத்தி என்பவற்றைப் புகைப்பர், இதனால் அசுத்தக் கிருமிகள் அழிவதற்கு வாய்ப்புண்டு அதன் பின் வெள்ளை நிறச்சீலை கட்டி வாயிலில் குருத்து வெள்ளைக் கொடி என்பவற்றால் அலங்கரிப்பார் இதன் பின் மரணச் செய்தி கேட்ட உற்றார், உறவினர் வந்து ஒப்பாரி வைத்து அழுவதுடன் வீட்டாருக்கு ஆறுதலும் கூறி அரவணைப்பர்.

சைவசமயி ஒருவரின் இறந்த உடல் 24மணிநேரத்திற்குள் எரிக்கப்பட வேண்டும். என்று நியதி இருந்த போதிலும் தேவைகள், வசதிகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு சில நாட்கள் செல்வதுமுண்டு இறந்த அன்றே எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்குரிய கிரியை முறைகளில் கவனம் செலுத்துவர்.

அதன்படி வாசலில் 8 அல்லது 10 அடியில் சிறுபந்தல் அமைத்து வெள்ளைச் சீலை மாவிலைத் தோரணங்களால் அலங்கரிப்பர் அப்பந்தல் நான்கு வாசல்கள் வாசல்கள் கொண்டதாக அமைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமய குருக்கள் அப்பந்தலுக்கு கோலமிட்டு அலங்கரிக்கப்பட்டு இருக்கும் பகுதியில் கும்பங்கள் வைத்து ஓமாக்கினி வளர்த்து வழிபடுவர். ருத்திர கும்பம் 11, புண்ணியாவாகன கும்பம் 01, பூதகணங்களுக்கு கும்பம் 05, சிவன் வர்த்தினி கும்பம் 02, சூர்ணாச்சலுக்கு கும்பம் 02, (சுண்ணமிடிக்கும் இடம்) ஆகும்.குருக்களின் மந்திர உச்சாடனத்துடன் ஓமக்கனி வளர்க்கப்படும் இதவும் சுற்றுச் சூழல் சுகாதார நோக்கம் கொண்டதாகவே அமைகிறது. ஊமக்கினிக் கிரியையில் சுண்ணம் இடிக்கப்படும் சுண்ணமிடிக்கும் உலக்கையும் உரலும் தூயநீரினால் சுத்தம் செய்து வெள்ளைச் சீலை கட்டப்படும், அதன் பின் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருப்பொற் சுண்ணப்பாடல்களைப்பாடி கிரியைக்குரிய மஞ்சளை இடிப்பர்.

சுண்ணம் இடித்த பின் இறந்தவரின் உடலை தனியான ஒரு இடத்தில் வைப்பர் இடித்த சுண்ணத்தை இறந்தவரின் உடலில் பூசி கும்பநீர், பால், தயிர், இளநீர், பன்னீர் முதலியவற்றால் நீராட்டுவர். அதன் பின் புத்தாடை அணிவித்து நன்கு அலங்கரிப்பர். அதாவது அவரது திருமணக் காட்சியை நினைவூட்டுவதாக அது அமையும். இதனை அடுத்து சிவாச்சாரியார் மந்திரங்கள் மூலம் பலவகையான சுத்திகளைச் செய்வர். இறைவனை வழிபட்டு இறந்தவரின் ஆன்மா இறைவனோடு இணையும் படி பாவனை பண்ணுவார்.

இதனையடுத்து இறந்தவரின் உடல் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் வைக்கப்படும், அதன்பின் அவரது பிள்ளகள், உற்றார், உறவினர்கள் அனைவரும் இறந்தவரின் பாதங்களை மஞ்சள் நீரினால் கழுவி வழிபாடு செய்வர், அதனையடுத்து சிவபுராணம் ஓத இறந்தவரின் உடல் சுடலைக்கு எடுத்துச் செல்லப்படும். செல்லும் வழியில் நெற்பொரி தூவி ஆசீர்வாதம் செய்வர். அத்தோடு பந்து எறிந்து விளையாடிச் செல்வதுமுண்டு, வறுத்தவித்த முளையானது என்பது இறந்தவருக்கும் இறப்பில்லை என்பதை உணர்த்தவும், வாழ்க்கையென்பது, ஓர் விளையாட்டுப் பந்து போய்திரும்புவது போல் நம்முடையது வாழ்க்கையும் அமையலாம் என்பதை எடுத்துக் காட்ட நெற்பொரியும், பந்தும் வீசும் நடைமுறைகளும், பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிக் கடமை செய்வோர் ஓர் குடத்துள் நீரும் ஓமாக்கினியால் வைக்கப்பட்ட விறகு ஒன்றும் எடுத்துச் செல்வர். சுடலைக்கு எடுத்துச் சென்ற உடலை அடுக்கிய விறகின் மேல் வைத்து இறுதிக்கடமை செய்வர், நீர்க்குடத்தை தலையில் ஏந்தி தீக்கட்டையை பின்னால் பிடித்து இடது பக்கமாய் மூன்று முறை வலம் வந்து நீர்க்குடத்தை கீழே போட்டு உடைத்து விட்டு சிதையை பாராது கொண்டு சென்ற தீக்கட்டையை சிதையில் வீசி திரும்பிப் பாராமல் வீடு செல்வர் அதன் பின் ஏனையோர் சிதைக்கு தீமுட்டி எரியச் செய்துவீடு செல்வர்.

இதனையடுத்து 3 அல்லது 5,7 நாட்களில் இறந்தவரின் உடல் சாம்பல் எடுக்கும் நிலையை உருவாக்கும் இச்சாம்பல் எடுக்கப்பட்டு பல கிரியைகளுக்கு உட்பட்டு பின் கற்கையில்(கடல், ஆறு) சங்கமிக்க விடப்படும்.

கிரியை செய்யாமல் அடக்கம் செய்யும் பிரேதத்திற்கு 31 நாள் வீட்டில் விநாயகர், சிவன், வர்த்தனி ஆகியோருக்கு 3 கும்பமும் புண்ணியவாகன கும்பமும் வைத்து புண்ணியவாசமும் செய்து ஆகுதி கொடுத்து செய்வதை கடமை செய்து எரித்தல் என்பர். அதனையடுத்து வீட்டில் அன்னதான வைபவமும் இடம்பெறும். அடுத்து 31ம் நாள் கடல் நீரால் வீடு வாசல்களை சுத்தம் செய்யப்பட்டு அன்று வீட்டில் பாரிய அன்னதானம் இடம்பெறும்.

அதனையடுத்து ஆண்டு திவசம் நடைபெறுவது வழக்கமாகும் 31ம் நாள் கிரியை 41ம் நாளிலும் செய்வதுமுண்டு அதன் கூலம் வீட்டாரின் ஏற்பட்ட குற்றங்கள் தோசங்கள் நீக்கி விட்டதாக கருதப்படும்.

கந்தசாமி உமாசுதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

## பகவான் ஸ்ரீ கிருஷ்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம் கல்முனை 0770643990 விலை: 100/=